செ.வெ.எண்: 169 நாள்: 13.03.2021

## புதுக்கோட்டையில் தேர்தல் விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சியர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.

---

புதுக்கோட்டை பொது அலுவலக வளாகத்தில் மகளிர் திட்டம் சார்பில் தேர்தல் விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் இன்று (13.03.2021) கொடியசைத்து துவக்கி வைத்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் அவர்கள் தெரிவித்ததாவது.

தமிழகத்தில் சட்டமன்ற பொதுத் தேர்தல் 06.04.2021 அன்று நடைபெற உள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தில் 100 சதவீத வாக்குப்பதிவை ஏற்படுத்தும் வகையில் வாக்காளர்களிடையே உரிய விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வகையில் இன்றைய தினம் புதுக்கோட்டை பொது அலுவலக வளாகத்தில் மகளிர் பங்கேற்ற தேர்தல் விழிப்புணர்வு பேரணி துவக்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும் வாக்காளர் விழிப்புணர்வு கையெழுத்து இயக்கமும் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

இப்பேரணியில் கலந்து கொண்ட மகளிர் "வாக்களிப்போம், வாக்களிப்போம் 100 சதவீதம் வாக்களிப்போம், வாக்குரிமை எங்கள் உரிமை, தேர்தலில் அனைவரும் தவறாமல் வாக்களிப்போம்" போன்ற பல்வேறு தேர்தல் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகள் ஏந்தி பேரணியில் கலந்து கொண்டனர். இப்பேரணி புதுக்கோட்டை பொது அலுவலக வளாகத்தில் துவங்கி புதிய பேருந்து நிலையம், அரசு மகளிர் கலைக்கல்லூரி வழியாக மாவட்ட ஆட்சியரகத்தில் முடிவுற்றது. இதில் ஏராளமான மகளிர் கலந்து கொண்டனர்.

இதே போன்று மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் தேர்தல் விழிப்புணர்வு பேரணிகள், மனித சங்கிலி, விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே பொதுமக்கள் அனைவரும் விழிப்புணர்வு பெற்று தேர்தலில் தவறாமல்

வாக்களித்து தங்களது ஜனநாயக கடமையை நிறைவேற்ற வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்ற வாக்காளர் விழிப்புணர்வு கோலப்போட்டியினை பார்வையிட்டார்.

இந்நிகழ்வின் போது மாவட்ட வருவாய் அலுவலர் பெ.வே.சரவணன், மகளிர் திட்ட இயக்குநர் ரேவதி, மாவட்ட சமூக நல அலுவலர் ரேணுகா, வருவாய் கோட்டாட்சியர் டெய்சிகுமார், உதவி திட்ட அலுவலர்கள் மற்றும் மகளிர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**